உ
கடவுள் துணை

# அறுபதுக்கு அறுபது

## மில்க்வைற் தொழிலகத்தின்
## மணிவிழாப் பொலிவும்



தொழிலதிபரின்
சஷ்டியப்த பூர்த்தியும்
02-11-1987

உ

கடவுள் துணை

# அறுபதுக்கு அறுபது

※

தொகுத்தவர்:

க. சி. குலரத்தினம்

※

வெளியிட்டோர்:

**மில்க்வைற் அன்பர்கள்**

**திருஆலவாய் - யாழ்ப்பாணம்.**

**2-11-1987**

## மில்க்வைற் தாபகர் தம்பதிகள்





## தொழிலதிபர் தம்பதிகள்





தருகை

தடாதகை

# இருவேறு நிறைவுகள்

எங்கள் நாட்டவரின் பேரபிமானத்திற்கும் அமோக ஆதரவுக்கும் நிலைக்களனை மில்க்வைற் தொழிலகத்திற்கும், இதன் இன்றைய தொழிலதிபரும் — சமாதான நீதவானும் சிவநெறிப் புரவலரும் சிவ தர்ம வள்ளலும் திருக்குறட்காவலருமான சிரஞ்சீவி க. கனகராசா அவர்களுக்கும் இந்த நல்லாண்டில் அறுபது நிறைவுறுகிறது.

இன்றைய சூழ்நிலையில் இந்த இருவேறு நிறைவுகளையும் விழாக்கோலத்தில் கொண்டாடமுடியாத காரணத்தால், அமைதியான வழிபாட்டு முறையில் குடும்பத்தார், அயலவர், நண்பர்கள் என்றித்திறத்தோர் மத்தியில் ஆலயச்சூழலில் ஓரளவு நிம்மதியாக விழாக்கொண்டாடினோம்.

இவ்விரு வைபவங்களையும் ஒன்று சேர்த்து நினைவு கூர்வதற்குப் பெரியவிழா மலர் வெளியிட எண்ணியிருந்த நாம், அனுபவம் மிக்க பெரியோர்கள் அவ்வப்போது சொன்ன அமுதவாசகங்கள் அறுபதைத் தெரிந்து சுருக்கமாக அறுபதுக்கு அறுபது என்னும் பெயரிட்டு வெளியிட்டு உங்களிடம் சமர்ப்பிக்கின்றோம். அன்று போல், இன்று போல் என்றும் உங்கள் அமோக ஆதரவு எங்கள் தொழிலகத் தயாரிப்புக்களுக்குக் கிடைத்தல் வேண்டும் என உங்களைக்கேட்டு, தொழிலகத்தையும் தொழிலதிபரையும் இன்னும் பல்லாண்டு மக்கள் சேவை செய்ய வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்தி அமைகிறோம்.

வணக்கம்.

**அன்பர்கள்.**

# அறுபதுக்கு அறுபது

1. ஆண்டவன் நம்மைக் காண்பதற்கு அடிக்கடி வருகின்றார். ஆனால் நாம் வீட்டிலிருப்பதில்லை.
2. அமைதி ஒழுங்கும், ஆதிக்கமின்மையும் சேரும் போது சமுதாயம் உச்சநிலையடைகிறது.
3. ஆத்திரத்தில் செய்யும் வேலை புயலில் படகேறு தல் போன்றதாய் அமையும்.
4. ஆத்திரமும் துவேசமும் தலையெடுத்தால் வாழ்வு வற்றி வரண்டு போகும்.
5. அறிவுக்குறையை ஈடுசெய்யவே மனிதன் ஆத் திரப்படுகிறான்.
6. ஆர்வம் இல்லாத எதுவும் பாதுகாப்புள்ளதாய் இருக்கமாட்டாது.
7. அன்பும் ஆற்றலும் சேர்ந்தால் அற்புதப் படைப்புகள் உண்டாகும்.
8. பொருளின் வறுமையை எளிதில் போக்கலாம் ஆனால் ஆன்மீக அறிவை எளிதில் போக்க முடியாது.
9. இறைவனிடத்தும், பெண்ணிடத்தும் நம்பிக்கை இழப்பதால் வாழ்க்கை கெடுகிறது.
10. ஆன்மிக வாழ்வுக்கும் புலன் சார்ந்த வாழ்வுக் கும் சமரசம் செய்து வைப்பது இசை.
11. தூய இதயத்திலிருந்தே நல்வாழ்வு என்னும் கனி உண்டாகிறது.
12. இதயத்தில் இடமிருக்கும் போது, இல்லத்திலும் கட்டாயமாக இடமிருக்கும்.
13. ஒவ்வொரு உயிரிலும் இறைவனைக் கண்ட வனுக்கு உண்மையின் ஒளி விளக்கமாகிறது.

14. இறைவனின் சக்தி அன்னை உமா. அவளே இமய மகள். அவளே தேவஞானம். அவளே பரம் பொருளைக் காட்டுபவள்.

15. தவம், தன்னடக்கம், பற்றற்றுக் கர்மாக்களைச் செய்தல் இவைகள் இறைவனின் அடிகள். சத்தியமே அவன் உயிர்.

16 இதயத்தில் புனிதமான இடத்தில் மறைத்து வைக்கப் பெற்றுள்ள புனிதமான தீ அமரர் உலகத்தைக் காட்டும்.

17. பொறிகளின் இன்பத்தைப் பின்தொடர்வோன் இறுதிப்பயனை எய்துவதில்லை.

18. உயர்ந்த எண்ணங்களை விட ஆத்மா உயர் வானது.

19. புனிதஞானம் பகுத்தறிவால் உண்டாவதில்லை. அது நல்லாசிரியன் அருளால் கிடைப்பது.

20. வேள்வியின் பெரும்பயன், அழிவில்லாப் பயன், அச்சம் இல்லாப் பெரும் பயன்.

21. தன்னுள் கோயில் கொண்டுள்ள இறைவனுக் காகத் திறந்து வைக்கப்பெற்ற வீடுதான் நசிகேதனம்.

22. "ஓம்" என்பது வேதங்கள் புகழ்ந்தேற்ற நிற்பது. வேள்விகள் புகழ்ந்து ஏற்றுவது. பரிசுத்தமான தூய வாழ்வைத் தருவது.

23. பொறிகளின் ஓய்வு, மனத்தில் ஒருமைப்பாடு, நல்லொழுக்கம், இதயத்தில் அமைதி என்பன ஆத்மனை அறிய உதவுவனவாகும்.

24. ஆத்மா ஒலியும் உருவமும் இல்லாதது, தொட் டுணர முடியாதது, மாற்ற முடியாதது, ஆதி அந்தம் இல்லாதது.

25. பொறிகளின் அமைதி நிறைந்த உறுதிப்பாடு யோகம் எனப் பெயர் பெறும்.

26. ஒரு சக்கரத்தின் குடத்தில் ஆரக்கால்கள் போல, பரம்பொருளில் தான் அனைத்தும் நிலை பெற்றிருக்கின்றன.

27. பறவைகள் தம்மரத்திற்குத் திரும்புவதைப் போல, அனைத்தும் பரம்பொருளையே சென்றடைகின்றன.

28. பிறரை அடக்கி ஆள விரும்புபவன், முதலில் தன்னை அடக்கியாளப் பயில வேண்டும்.

29. அதிகாரம் என்பது அதன் கடைசி அணுவரை கடமைதான்.

30. தேசீய அநீதியே தேசிய அழிவுக்குக் காரணமாய் அமையும்

31. அநீதியைத் தாங்குபவனை விட, அநீதி இழைப்பவனே என்றும் அதிக அவதி உறுவான்.

32. கொற்றவனுயினும் குடியானவனுயினும் தன் இருப்பிடத்தில் அமைதி காண்பவனே இன்பத்தை அநுபவிப்பவனுவான்.

33. ஆசை முடியும் கட்டத்தில் தான் அமைதி பிறக்கின்றது.

34. எவனொருவன் வித்தை, தவம், தானம், யக்னம், குணநலம், தருமம் இல்லாமல் உலாவுகின்ருனே, அவன் பூமிக்குப் பாரமாய் மனிதவுருவில் விலங்காக உள்ளான்.

35. மலர்ச்செடிகளால் மண் மணக்கிறது. மலர்களில் மண் மணப்பதில்லை. சாதுக்களால் கெட்டவர்கள் திருந்துகிருர்கள். சாதுக்களைக் கெட்டவர்கள் பழுதாக்கமுடியாது.

36 உள்ளத்தில் அமைதி இல்லாதபோது, அதைப் புறத்தே காண முயற்சி எடுப்பது பயனற்றதாகும்.

37. அறத்தின் அடிப்படையில் தவறானது, அரசியல் அடிப்படையில் சரியாகாது.

38. ஒரு சிலருடைய நன்மைக்காக, வேறு சிலர் நாசமடைதல் வேண்டும் என்பது இன்றைய அரசியல் நெறி.

39. கட்சிக் கொடிகளின் நிழலில்தான், நாட்டுபற்று புதைக்கப்படுகிறது.

40. அரசியல்வாதி ஆண்டவனையே தட்டிக் கழித்து விட வல்லவன்.

41. ஒரு கதிர் விளையுமிடத்தில் இரண்டு கதிர்கள் விளையச் செய்யும் விவசாயி அரசியல்வாதியை விட விவேகி.

42. அரசாங்கங்களின் நடபடிக்கைகள் தற்காலிகமானவை. ஆனால் மக்களிடையே உறவுகள் நிரந்தரமானவை, நிலையானவை.

43. வாய்மை, அருள், அழகு அனைத்தும் ஒரே முழுமையின் பல்வேறு முகங்கள்.

44. ஒழுக்கமில்லாத அழகு மணமில்லாத மலர்.

45. எல்லாப் பொருள்களிலும் அழகு உள்ளது. ஆனால் அதை எல்லோரும் காண்பதில்லை.

46. அறமும் அமைதியும் உள்ளவர்கள் உலகில் அனைத்தையும் வென்றுவிடுவார்.

47. அறத்தைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொருவரும் இறைவனின் மைந்தன்.

48. மேலான மனிதன் என்றும் அறம்பற்றியே சிந்திக்கிறான். கீழோன் சுகம்பற்றியே சிந்திக்கிறான்.

49. கலையறிவின் இன்பமே நிலையான இன்பம் எனக் கண்டவரே அறிஞர்.

50. நம் அறியாமையை உணர்வதே அறிவை எய்துவதற்கு முதற்படி.

51. அறிவு செல்வக்களஞ்சியம். அநுபவம் அதன் திறவுகோல்.

52. உனக்குச் சிறந்த அறிவுரை கூறக் கூடியவர் உன்னைத்தவிர வேறுயாரும் இல்லை.

53. விவேகத்துக்ுத் தந்தை அனுபவம். அதன் தாய் நினைவாற்றல்.

54. அன்பளிப்புப் பொருளைவிட அதை அளிக்கும் முறைதான் மதிப்புள்ளது,

55. விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பனவுள் அன்பே தலையாய பண்பு.

56. அன்பை நீக்கிவிட்டால் உலகம் சுடு காடும் இடு காடுமாய் நிலவும்.

57. நாடிப் பெறும் அன்பு நல்லது. நாடாமல் அளிக்கப் பெறும் அன்பு மிக நல்லது.

58. ஆசிரியர் ஊழல் மலிந்தவரானல், உலகமே ஊழல் மலிந்ததாகிவிடும்.

59, ஆசைகளை திருப்தி செய்வதைவிட, மட்டுப் படுத்துவதில்தான் அமைதி உண்டாகிறது.

60. ஆடை எளிமையாயிருக்கும் போது, அழகு அதிகமாக ஒளி வீசுகிறது.

---

## வாழ்க வாழ்கவே!

பணிகள் வாழ்க! பயிர் வாழ்க!
பருவம் பொய்யா மழைவாழ்க!
அணியாம் மணியும் வெண்ணீறும்
அரசும் வாழ்க! அறம் வாழ்க!
திணியார் உறவும் தீந்தமிழும்
திருவார் நெறியும் வாழ்க என்றும்!
மணியார் விழவும் மில்க்வைற்றும்
மலர்ந்து வாழ்க வாழ்கவே!

# நாம் செய்யவேண்டியவை

1. நல்லதையே நினைப்போம்.
2. நல்லதையே செய்வோம்.
3. சுற்றுடலைத் தூய்மை செய்வோம்.
4. குளங்களைத் தோண்டி ஆழமாக்குவோம்.
5. போதியளவு மழைநீரைத் தேக்குவோம்.
6. இயன்றளவு பலவகை மரங்களை நடுவோம்.
7. பனையபிவிருத்தியில் ஊக்கம் எடுப்போம்.
8. பனம் பண்டங்களை உபயோகிப்போம்.
9. உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்.
10. வயல்களில் மாற்றுப்பயிர்களை உண்டாக்குவோம்
11. நல்லதமிழ் பேசவும் எழுதவும் பயில்வோம்.
12. பெரியவர்களை வணங்கி நல்லாசி பெறுவோம்.
13. எல்லோரும் தினமும் யோகாசனம் செய்வோம்.
14. கடமையை எல்லோரும் சரிவரச் செய்வோம்.
15. எல்லோரும் வீட்டுத்தோட்டம் செய்வோம்.

## நாளும் நற்பணி செய்ய
## உங்கள் ஆதரவை நாடும்

# மில்க்வைற்

# 60 60

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்